**செய்தி வெளியீடு எண்: 105** **நாள்: 30–01–2012.**

ஆதிதிராவிடர் (ம) பழங்குடியின மக்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கரையுடன் செயல்பட்டு வரும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா தலைமையிலான தமிழ்நாடு அரசு பல்வேறு சீரிய திட்டங்களை அம்மக்களின் நலன் கருதி முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. ஆதிதிராவிடர் (ம) பழங்குடியின மாணவ / மாணவிகள் சுகாதார வசதியுடன் கல்வி அறிவு பெற்று வாழ்க்கையில் முன்னேறும் வகையில் பல திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் உறுதியுடன் செயல்படுத்தி வருகிறார். இதனடிப்படையில் முன் எப்போதும் இல்லாத வகையில் ஒரே நேரத்தில் 1059 ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் மாணவ / மாணவிகளின் விடுதிகளை ரூ.76 கோடி செலவில் புதுப்பிக்கவும், வாடகை கட்டடங்களில் செயல்படும் 93 விடுதிகளுக்கு மாற்றாக ரூ.46 கோடி செலவில் சொந்த கட்டடங்கள் கட்டிடவும், நலிவடைந்த நிலையில் இருந்த தாட்கோவிற்கு புத்துயிர் ஊட்டும் வகையில் மூலதன தொகையாக ரூ.26 கோடி நிதியுதவி அளித்தும், தாட்கோ தொடங்கப்பட்ட 1972 முதல் இதுவரை பொருளாதார கடன்களுக்கான மானிய உச்ச வரம்பு ரூ.25 ஆயிரத்திலிருந்து கடன் உதவியில் 30 சதவீதம் அதிகபட்சமாக ரூ.2.25 இலட்சம் மானியமாக வழங்க உத்தரவிட்டும், ஆதிதிராவிடர் (ம) பழங்குடியின பள்ளி மாணவ / மாணவிகளின் உணவு கட்டணத்தை மாதம் ரூ.450 லிருந்து ரூ.650 ஆகவும், கல்லூரி மாணவ / மாணவிகளின் உணவு கட்டணத்தை மாதம் ரூ.550 லிருந்து ரூ.750ஆக உயர்த்தியும், தனியார் பொறியியல் கல்லூரிகளில் படிக்கும் ஆதிதிராவிடர் (ம) பழங்குடியின மாணவ / மாணவிகளுக்கு கல்வி கட்டண நிதியுதவியாக ரூ.26 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இப்படிப்பட்ட பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது அம்மா தலைமையிலான இந்த அரசு.

இத்திட்டங்கள் குறித்து பொதுமக்கள், ஆதிதிராவிடர் (ம) பழங்குடியின மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தீவுத் திடல் அரசு பொருட்காட்சியில் ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அரங்கின் முதல் தளத்தில் பனோரமிக் தியேட்டர் (Panoramic Theater) அமைக்கப்பட்டுள்ளது. அதில் ஊட்டியின் இயற்கை எழில்மிகு அழகு அப்படியே நம் கண் முன்னே கொண்டு வந்து தத்துருபமாக நிறுத்தப்பட்டுள்ளது. இந்த அரங்கில் நுழையும் ஒவ்வொருவருக்கும் ஊட்டியிலேயே இருப்பது போன்ற உணர்வு ஏற்படும் வகையில் ஊட்டியின் குளிர், பனிச்சாரல், மேகக்கூட்டம் என்று நிஜ ஊட்டியை போலவே நிர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தியளவில் அரசு மற்றும் அரசு சாரா பொருட்காட்சிகளில் இந்த

மாதிரியான உலகத்தரத்துடன் கூடிய பனோரமிக் தியேட்டரை (Panoramic Theater) அமைத்திருப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை அரங்கு இந்த 38 வருட அகில இந்திய தொழில் பொருட்காட்சி வரலாற்றில் வித்தியாசமானதாகவும், பார்க்கும் அனைவருக்கும் ஒரே நேரத்தில் தேவையான தகவல்களை தருவதோடு மட்டுமில்லாமல் மக்களை மகிழ்வித்து ஆச்சரியப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை அரங்கில் வெர்ச்சுவல் ஸ்டுடியோ (Virtual Studio) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஸ்டுடியோ குழந்தைகள் மற்றும் பள்ளி மாணவர்களை ஈர்க்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு தாட்கோ மூலம் தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தில் பயிற்சி பெற்றவர்கள் பணிபுரிகிறார்கள். இந்த ஸ்டுடியோவில் குழந்தைகளை 5 நிமிடம் வீடியோ எடுத்து அதை அனிமேஷன், கிராப்பிக்ஸ் முறையில் விமானம் ஓட்டுவது, வானத்தில் மிதப்பது, கடலில் நீந்துவது, என பலவிதங்களில் தயார் செய்து 10 நிமிடங்களில் அதை குறுந்தகட்டில் (C.D) தருவார்கள். அதற்கு ரூ.50 மட்டுமே கட்டணம், குறுந்தகட்டில் தங்களை பல நிலைகளில் பார்க்கும் குழந்தைகள் குதூகுலத்துடன் மகிழ்ச்சி அடைவார்கள் என்பது நிச்சயம். ஆதிதிராவிடர்(ம) பழங்குடியினர் நலத்துறை அரங்கில் பழங்குடியினரால் உற்பத்தி செய்யப்பட்டபொருட்களின் விற்பனை மையமும் அமைக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்(ம) பழங்குடியினர் நலத்துறை அரங்கு எந்த வருடமும் இல்லாத வகையில் இந்த வருடம் அனைவரும் பார்த்து வியக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. காண்போர் அனைவரையும் பிரம்மிப்பில் ஆழ்த்தும் இந்த அரங்கை காண அனைத்து தரப்பு மக்களும் வருகை தர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வரங்கை மாண்புமிகு ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. என். சுப்பிரமணியன், அரசு செயலாளர் திரு. ஆ.சு. ஜீவரத்தினம், இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு. சா. விஜயராஜ் குமார், இ.ஆ.ப., ஆகியோர் பார்வையிட்டனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**